

ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் நேற்று (18.8.2024) சென்னை ராஜீவ்காந்தி அரசுத் தலைமை மருத்துவமனைக்கு சென்று, மறைந்த கடலோர காவல்படையின் தலைமைத் தளபதி ராகேஷ் பால் அவர்களது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு புதுச்சேரி கடல்பகுதியின் தலைமை கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவி குமார் திங்ரா ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் கொளத்தூரில் 'என் உயிரினும் மேலான!' கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.லோகேஷ் தலைமையில் நடைபெற்றது. இந்த பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கினார். இதில் நடுவர்களாக திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி. கத்திலி கரிகாலன் ஆகியோர் செயல்பட்டனர். இந்நிகழ்ச்சியில் மேலிட பார்வையாளர்கள் எஸ்.ஜோயல், அன்பகம் செந்தில் மற்றும் கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி, ப.ரங்கநாதன், ஐ.சி.எஃப்.முரளிதரன், ஏ.நாகராஜன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிகா மகேஷ்குமார், எஸ்.தனசேகர், ஜே.பாலமுருகன், பா.ஜெகதீஷ், கா.வினோத், ஜி.கே. பிரபு, ஆர்.டி.சங்கர், நானா, மாமன்ற உறுப்பினர்கள் யோக பிரியா, சாரதா, தாவூத்பி, ஸ்ரீதனி, அமுதா மற்றும் மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

பி.டி.பாண்டிச்செல்வம் தலைமை! ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. - தா.இளைய அருணா முன்னிலை! ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# இராயபுரத்தில் கருத்தரங்கம் - ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைக்கிறார்!

## நாஞ்சில் சம்பத் - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - காசி முத்துமாணிக்கம் - கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை!

சென்னை, ஆக.19-

தி.மு.க. வர்த்தகர் அணி சார்பில் 'ஒன்றிய அரசின் ஓரவஞ்சனை பட்ஜெட், வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறுகின்றது.

இக்கருத்தரங்கம் இன்று (19.8.2024, திங்கட்கிழமை) மாலை சரியாக 6 மணிக்கு இராயபுரம், அறிவகம் திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இக்கருத்தரங்கிற்கு தி.மு.க. வர்த்தகர் அணி இணைச் செயலாளர் பி.டி. பாண்டிச் செல்வம் தலைமை வகிக்கிறார். ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., தா.இளைய அருணா, இரா.மதிவாணன், இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், வே.சிவக்குமார், வி.பி.மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

என்.சிவக்குமார், கூல் பி.பிரகாஷ், லயன் தியாகராஜன், வி.வி.தங்கராஜ், கே. அசோக், மணிகண்டன், பொன்ராஜ், எம்.ஆர்.எப். துரைராஜ், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

கருத்தரங்கை கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார்.

நாஞ்சில் சம்பத் சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., கழக வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., ந.மனோகரன், இரா.நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசுகின்றனர்.

இதில் ஆர்.வெற்றிவீரன், நாகம்மை, மு.கோபி, கமலக்கண்ணன், நா.சண்முகம், ராஜேந்திரன், கமல், சோமசுந்தரமூர்த்தி, லயோலா மதன், லியோ சுரேஷ், லயன் தீனதயாளன், கோவிந்தசாமி, ரமேஷ் பாபு, காணிக்கை நாதன், கார்த்திக் செங்குட்டுவன், லட்சுமிவேலு, பா.கதிரவன், லெனின், குருவம்மாள், வேளாங்கண்ணி, எஸ்.மணிகண்டன், எம்.பிரேம்குமார், ஜெ.தினேஷ்குமார், என். டி.சேகர், ஆர்.டி.கார்த்தக், அரிராமன், தமிழ்ச்செல்வன், எம்.ஆர்.பி.பழனி, எஸ்.சுப்பிரமணி, த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், ஜெயலட்சுமி, லோ. மோகன், சீனிவாசன், காட்டன்சதீஷ், ஆறு.ஆறுமுகம், பி.கண்ணன், இஸ்மாயில், கு.ரமேஷ், திருஞானம், மதன், மாலையம்மாள், இரா.பாலன், எஸ்.புகழேந்தி, கௌரீஸ்வரன், ரவி, கொரியர் முருகன், பாலா, லட்சுமணன், க. கலைச்செல்வன், குமார், அத்தோ முனுசாமி, எஸ். சுரேஷ், எம்.என்.வெங்கட், ஐ.சி.எப்.பழனி, என்.பாரி, கே.லட்சுமணன், மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.


திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

# மாநகரம் ஒன்றியம் - நகரம்- பகுதி - பேரூர் வாரியாக பொது உறுப்பினர் கூட்டம்!



மாவட்டச் செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ அறிவிப்பு

| தேதி | நேரம் | நிர்வாகம் |
|---|---|---|
| 20.08.2024 செவ்வாய் | மாலை 4 மணி | பேபிசேகர் , ஆவடி கிழக்கு பகுதி - MSV திருமண மண்டபம், திருமுல்லைவாயில் |
| 24.08.2024 சனி | காலை 10 மணி | ப.ச.கமலேஷ், பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் - SVV திருமண மண்டபம், சென்னீர்குப்பம் |
| 24.08.2024 சனி | மாலை 4 மணி | ஜி.நாராயணபிரசாத் - ஆவடி வடக்கு பகுதி - ஜெய க்ரிஷ் திருமண மண்டபம், தண்டுறை |
| 24.08.2024 சனி | மாலை 7 மணி | ஜி.ராஜேந்திரன்- ஆவடி தெற்குபகுதி கீதா சிட்டாடல் மஹால், பருதிப்பட்டு |
| 25.08.2024 ஞாயிறு | மாலை 4 மணி | புஜ்ஜிராமகிருஷ்ணன் - திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் - APK மஹால், ஈக்காடு |
| 26.08.2024 திங்கள் | காலை 10 மணி | சேபிரேம்ஆனந்த் - திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் வெங்கடாஜலபதி திருமண மண்டபம், வேப்பம்பட்டு |
| 26.08.2024 திங்கள் | மாலை 4 மணி | பொன் விஜயன், ஆவடி மேற்கு பகுதி வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், பட்டாபிராம் |
| 27.08.2024 செவ்வாய் | காலை 10 மணி | ஜி.ஆர்.திருமலை - பூவிருந்தவல்லி நகரம் கல்யாணி பத்மாவதி சீனிவாச மஹால், கரையான்சாவடி |
| 27.08.2024 செவ்வாய் | மாலை 4 மணி | தி.வை.ரவி - திருநின்றவூர் நகரம் ஷண்முகா திருமண மண்டபம், திருநின்றவூர் |
| 28.08.2024 புதன் | காலை 10 மணி | தங்கம்முரளி - எல்லாபுரம் மத்திய ஒன்றியம் - தாட்சாயணி திருமண மண்டபம், தாமரை பாக்கம். |
| 28.08.2024 புதன் | மாலை 4 மணி | என்.இ.கே.மூர்த்தி - திருவேற்காடு நகரம் பிரேமதாசா திருமண மண்டபம், திருவேற்காடு |
| 29.08.2024 வியாழன் | காலை 10 மணி | டி.தேசிங்கு - பூவிருந்தவல்லிமேற்குஒன்றியம் CMR திருமண மண்டபம், கூடப்பாக்கம் |
| 31.08.2024 சனி | மாலை 4 மணி | தி.வே.முனுசாமி - திருமழிசை பேரூர் KV மஹால், திருமழிசை |
| 01.09.2024 ஞாயிறு | காலை 10மணி | ஆர்.ஜெயசீலன் - திருவள்ளூர் மேற்குஒன்றியம் லட்சுமி மஹால் காக்களூர் |

'எனவே சம்பந்தப்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் முறையாக கூட்டம் அழைப்பிதழ்களை அச்சிட்டு நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பி னர்கள் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள்கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் அனைவரும் பங்கேற்கும் விதமாக பொது உறுப்பினர் கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாவட்ட கழக சார்பு அணிகளுக்கான பொது உறுப்பினர் கூட்டம் பின்னர் அட்டவணை அறிவிக்கப்படும்.

**ஆவடி சா.மு.நாசர்** எம்.எல்.ஏ,

செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக.




தாம்பரம் மாநகராட்சி செங்கல்பட்டு மாவட்டம் அரசு மேல்நிலைப்பள்ளி சேலையூர் கிழக்கு தாம்பரத்தில் கலைஞரின் வருமுன் காப்போம் மற்றும் மருத்துவ முகாம் திட்டத்தையும் கர்ப்பிணி பெண்களுக்கு இலவச சத்துப் பொருட்கள் உள்ளடக்கிய பெட்டகத்தையும் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.வசந்தகுமாரி. மண்டல குழு தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் ஜோதி குமார், கொடி தாமோதரன், திருமதி.சசிகலா கார்த்தி, திருமதி.ஷகிலா ஜான்சி மேரி, பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், (து) அமைப்பாளர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் கழகத் தோழர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

ஆவடி மாநகராட்சியில்

# வெள்ளத் தடுப்புப் பணிகள்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. ஆய்வு!

திருவள்ளூர், ஆக 19

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சியில் கடந்த ஆண்டு கன மழைக்கு பெரும்பாலான பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதனை அடுத்து கடந்த சில மாதங்களாக ஆவடி மாநகராட்சியில் வெள்ள தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அந்தவகையில் கருமாரியம்மன் கோவில் முதல் பருத்திப்பட்டு ஏரி வரை செல்லம் கால்வாய், சி.டி.எச். சாலை முதல் பருத்திப்பட்டு ஏரி வரை செல்லும் கால்வாய், புதிய ராணுவ சாலையில் உள்ள கால்வாய், அண்ணனூர் சங்கர் நகர், ஜோதி நகர் பகுதியில் உள்ள கால்வாய் மற்றும் தற்போதைய நிலை நடைபெற்று வரும் பணிகள் குறித்து முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம். எல்.ஏ, நேரில் சென்று பார்வையிட்டு மழை நெருங்கி வரும் சூழலில் கால்வாய் பணிகளை துரிதப்படுத்தி முடித்திடவும் கால்வாய்களைத் தூர்வார அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும் கால்வாய் வழித்தடத்தில் உள்ள நீர்நிலை ஆக்கிரமிப்புகளை உடனடியாக கண்டறிந்து அகற்றிடவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, மாநகராட்சி துணை ஆணையர் சங்கரன், உதவி செயற் பொறியாளர் உதவி பொறியாளர் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், பகுதி கழகச் செயலாளர்கள் பேபிசேகர், ஜி.நாராயண பிசாத், பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், வழக்கறிஞர் பெ.வினோத் உள்பட பொதுப்பணித்துறை அதிகாரிகள் நீர்வளத்துறை அதிகாரிகள் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# தாணிக்கோட்டகம் அரசுப் பள்ளிக்கு ரூ.3.75 லட்சம்!

## தொழிலதிபர் முரசொலி சிங்காரம் வழங்கினார்!

வேதாரண்யம், ஆக. 19-

வேதாரண்யம் அருகேயுள்ள தாணிக்கோட்டகம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் பள்ளி வளர்ச்சிக்காக தொழிலதிபர் முரசொலி சிங்காரம் ரூ.3.75 லட்சம் வழங்கினார்.

பள்ளியின் இலக்கிய மன்றம், விளையாட்டு பரிசளிப்பு, சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு, 100 சதவீதம் தேர்ச்சிக்கு உதவிய ஆசிரியர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கல் உள்ளிட்ட ஐம்பெரும் விழா வியாழக்கிழமை நடை பெற்றது.

விழாவுக்கு பள்ளித் தலைமையாசிரியர் அ.தமிழ்ச்செல்வன் தலைமை வகித்தார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.கே.சி. சுபாஷினி, பணி ஓய்வு பெற்ற முதன்மைக் கல்வி அலுவலர் சாமி, சத்தியமூர்த்தி, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் சி.கார்த்திகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், பள்ளியின் 100 சதவீத தேர்ச்சிக்கு உதவிய 23 ஆசிரியர்களை பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரும் தொழிலதிபர் முரசொலி சிங்காரம் பாராட்டினார். அப்போது, அந்த ஆசிரியர்களுக்கு ரொக்கப் பரிசாக தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ.1.15 லட்சம் வழங்கினார்.

மேலும், காலிப்பணியிடங்களை ஈடு செய்து நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் ஊதியத்துக்காக ரூ. 2 லட்சம் மாணவர்களுக்கான பரிசுத் தொகையாக ரூ.60,000 என மொத்தம் ரூ.3.75! லட்சம் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார்.

விழாவில், திருப்பூண்டிஅரசுப் பள்ளி தலைமையாசிரியர் ஆறு. துரைக்கண்ணன் 'வையத் தலைமை கொள்' எனும் தலைப்பில் பேசினார். அரசுப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் இள.தொல்காப்பியன், சீ. முருகேசன், சோ. சிங்காரவேலன், கா. அகோர மூர்த்தி உள்ளிட்டோர் பேசினர்.

விளையாட்டு மற்றும் இலக்கியப் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார் அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக.19 -

காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (20.8.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு, ஏ.ஜெ.எஸ். திருமண மண்டபம் கீழ் அம்பியில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் எஸ்.மாரி முத்து தலைமை வகிக்கிறார். நான் (ஒன்றிய செயலாளர் பி.எம்.குமார்) அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறேன்.

இரா.இளஞ்செழியன், எஸ்.வி.ரமேஷ், மகாலட்சுமி இராஜசேகர், அ.வேலுசாமி, எஸ்.எஸ்.ஆர்.சசிக்குமார், பி.என்.ரவி, நா.கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.எ. சிறப்புரை யாற்றுகிறார்.

இதில் சிறுவேடர் க.செல்வம் எம்.பி, சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ, எம்.எஸ். சுகுமார், மலர்கொடி குமார், நித்யா சுகுமார், சி.ராதாகிருஷ்ணன், ஆ.சசிக்குமார், தி.இராம்பிரசாத், எஸ். தமிழ்ச்செல்வன், எம்.துரைசாமி, எம்.மகாவீர்சந்த், பி.எம். நீலகண்டன், டி. ராஜா, ஆர்.வரதன், சி.எஸ். விஜி, எம்.மகேந்திரன், ஆர். விஜயலட்சுமி, எஸ்.நவீன், ஆ.தினேஷ் பாபு, கே.முனுசாமி, கே.பி.இராதாகிருஷ்ணன், க.பார்த்திபன், து. ராஜா, திலகவதி தியாகராஜன், மோகனா இளஞ்செழியன், வளர்மதி மனோகரன், கு.பாலாஜி, ஆதிலட்சுமி ரவி, ஹேமலதா ஆடலரசு, கோட்டீஸ்வரி ஆறுமுகம், பா.தேவபாலன், எஸ்.பாரத், டி.தேவேந்திரன், சு.வெங்கடேசன், ம.ரமேஷ், ஜி.குணபூசனம், மலர் ராமச்சந்திரன், சைலஜாசேகர், திலகவதி குமரேசன், சம்பூரணம் சுப்பிரமணி, பேபிசேட்டு, இந்திரா ஜோசப், தெய்வானைசுரேஷ் பாபு, ஜெனிட்டாபிரசாத் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். கே.கார்த்திகேயன் நன்றி கூறுகிறார்.

அது போது கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப் படவிருப்பதால் ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.


வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ள கதிர் ஆனந்த் எம்.பி. (19.08.2024, திங்கள் கிழமை) கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**வேலூர் மாவட்டம்**
**குடியாத்தம் சட்டமன்றம் குடியாத்தம் தெற்கு ஒன்றியம்**

| ஊராட்சி | நன்றி தெரிவிக்கும் இடம் | நேரம் காலை |
|---|---|---|
| உள்ளி | ஆத்தோரம்பட்டி | 8.00 மணி |
| சின்னதோட்டாளம் | சின்னதோட்டாளம் | 8.30 மணி |
| குளிதிகை | சாந்திநகர் | 9.00 மணி |
| கீழ்பட்டி | பேருந்து நிறுத்தம் (மேல்பட்டி ரோடு) | 9.30 மணி |
| வளத்தூர் | பேருந்து நிறுத்தம் (மேல்பட்டி ரோடு) | 10.00 மணி |
| கருணீகசமுத்திரம் | பேருந்து நிறுத்தம் (மேல்பட்டி ரோடு) | 10.30 மணி |
| எர்த்தாங்கல் | கெங்கையம்மன் கோயில் அருகில் | 11.00 மணி |
| | **குடியாத்தம் மேற்கு ஒன்றியம்** | |
| சேம்பள்ளி | பஸ் நிலையம் | 11.30 மணி |
| அக்ராவரம் | பிள்ளையார் கோயில் பஸ் நிலையம் | 11.45 மணி |
| பெரும்பாடி | பெரும்பாடி பஸ் நிலையம் | 12.00 மணி |
| மூங்கப்பட்டு | மூங்கப்பட்டு | 12.15 மணி |
| சீவூர் ஊராட்சி | நேரு நகர், ஆலியார் தெரு | 12.30 மணி |
| | **குடியாத்தம் நகரம்** | |
| குடியாத்தம் நகரம் | நான்கு முனை கூட்ரோடு | மாலை 4.00மணி |
| | சித்தூர் கேட் | மாலை 4.30மணி |
| | கோபாலபுரம் மஜித் அருகில் | மாலை 5.00மணி |
| | நெல்லூர்பேட்டை காந்தி சிலை அருகில் | மாலை 5.30மணி |
| | அண்ணாசிலை அருகில் | மாலை 6.00 மணி |
| | பழைய பேருந்து நிலையம் | மாலை 6.30 மணி |
| | ஆர்.எஸ். சாலை, அம்பேத்கர் சிலை அருகில். | மாலை 7.00மணி |




தாணிக்கோட்டகம் அரசுப் பள்ளியில், 100 சதவீத தேர்ச்சிக்கு உதவிய ஆசிரியர்களுக்கு தலா ரூ. 5 ஆயிரம் ரொக்கத்தை தொழிலதிபர் முரசொலி சிங்காரம் வழங்கி பாராட்டினார். இதில் முதன்மைக் கல்வி அலுவலர் சுபாஷினி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.